

சேலம் மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட ஓமலூர் கருக்கல் வாடியில், “உங்களுடன் ஸ்டாலின்” திட்டத்தில் மனுக்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து மாவட்டச் செயலாளர், அமைச்சர் இரா.இராஜேந்திரன் ஆய்வு செய்து மனுக்கள் மீது உடன் நடவடிக்கை எடுத்து, மக்களுக்கு நிவாரணத்தைப் பெற்று தர கேட்டுக் கொண்டார். உடன் சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் இரா. பிருந்தா தேவி, மாநகரச் செயலாளர் பா.ரகுபதி மற்றும் துறை அலுவலர்கள் உள்ளனர்.



சென்னை தலைமைச் செயலகத்தில், வனம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், அரசு அறிவித்துள்ள, மாநிலத்தின் மூன்றாவது உயிரியல் பாரம்பரிய தளமாக ஈரோடு மாவட்டத்தில் உள்ள எலத்தூர் ஏரி பற்றிய குறும்படத்தை வெளியிட்டார். இந்நிகழ்வில் சுற்றுச் சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி. சுப்ரியா சாகு, முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் ஸ்ரீனிவாஸ் ஆர்.ரெட்டி, தமிழ்நாடு உயிர்ப் பல்வகைமை வாரிய உறுப்பினர் செயலர் செல்வி. மித்தா பானர்ஜி, சத்தியமங்கலம் மாவட்ட வன அலுவலர் யோகேஷ் குலால், சூழல் அறிவோம் அமைப்பின் உறுப்பினர் தீபக் மற்றும் உயிர்ப் பல்வகைமை மேலாண்மை குழு எலத்தூர் பேரூராட்சி தலைவர் நாகராஜன் ஆகியோர் உடனிருந்தனர்.

# கருநாடக மாநில தி.மு.க. சார்பில் பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் நிகழ்ச்சி!

## மாநில அமைப்பாளர் ந.இராமசாமி வேண்டுகோள்!



பெங்களூரு, செப். 3 -

கருநாடக மாநில தி.மு.க. அமைப்பாளர் ந. இராமசாமி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

கருநாடக தி.மு.க. சார்பில் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாள் நிகழ்ச்சி செப்டம்பர் 15.09.2025, தேதி திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு கருநாடக மாநில தி.மு.க கலைஞர் வளாகத்தில் கழக இருவண்ணக் கொடியை ஏற்றி வைத்து தளபதி மு.க.ஸ்டாலின் மணி விழா அரங்கத்தில் அமைத்துள்ள தந்தை பெரியார் திருவுருவப் படத்திற்கும், பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர் திருவுருவச் சிலைகளுக்கும் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தி, திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஐம்பெரும் தலைவர்கள் திருவுருவப் படங்களை திறந்து வைத்து, அனைவருக்கும் இனிப்பு வழங்கும் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

நிகழ்ச்சியில் கருநாடக மாநில தி.மு.க நிர்வாகிகள், முன்னாள் மாநில நிர்வாகிகள், தலைமைப் பொதுக்குழு உறுப்பினர்கள், இளைஞரணி நிர்வாகிகள், இலக்கியணி நிர்வாகிகள், மகளிரணி நிர்வாகிகள், தொ.மு.ச பேரவை நிர்வாகிகள், கழக தோழர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்க கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## எழும்பூர் சட்டமன்றத் தொகுதியில்

# திட்டப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம்!

## இ.பரந்தாமன் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது!

சென்னை, செப். 3 -

எழும்பூர் தொகுதி, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 6க்குட்பட்ட வார்டு எண்.77 மற்றும் 78இல் நடைபெற்று வரும் திட்டப் பணிகளின் முன்னேற்றம் குறித்த ஆய்வுக் கூட்டம், கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் தலைமையில் நடைபெற்றது.

எழும்பூர் தொகுதி, சென்னை மாநகராட்சி, மண்டலம் 6க்குட்பட்ட வார்டு எண். 77 மற்றும் 78 இல் சென்னை மாநகராட்சி, சென்னைப் பெருநகரக் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் வடிகால் வாரியம் ஆகிய துறைகளின் சார்பில் நடைபெற்று வரும் பணிகள்; இவ்விரு வார்டுகளிலும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் நடைபெற்று வரும் பணிகள்; இவ்விரு வார்டுகளைச் சேர்ந்த பொதுமக்கள் அளித்துள்ள கோரிக்கைகளைத் தீர்ப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் எதிர் வரும் பருவமழைக் காலத்தை எதிர்கொள்ள மேற்கொள்ளப்படவேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக் கூட்டம் சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் இ.பரந்தாமன் தலைமையில், சென்னை மாநகராட்சி மத்திய மண்டலத் துணை ஆணையர் எச். ஆர். கௌஷிக், ஐ.ஏ.எஸ். முன்னிலையில் ஷெனாய் நகரிலுள்ள மாநகராட்சி மத்திய மண்டல அலுவலகத்தில் நடைபெற்றது. இவ்விரு வார்டுகளில் நடைபெற்று வரும் பணிகளை விரைந்து முடிக்குமாறு இ.பரந்தாமன், எம்.எல்.ஏ., அதிகாரிகளிடம் அறிவுறுத்தினார்.

இவ்வாய்வுக் கூட்டத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி 6ஆவது மண்டல அலுவலர் மற்றும் 77, 78 வார்டுகளைச் சேர்ந்த மாநகராட்சி, சென்னைப் பெருநகரக் குடிநீர் வழங்கல் வாரியத்தின் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



கரூர் மாவட்டக் கழக இளைஞரணியின் சார்பில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் விழா மற்றும் திராவிட மாடல் நல்லாட்சியின் நான்காண்டு சாதனை விளக்கப் பொதுக்கூட்டம் கரூர் வடக்கு ஒன்றியம் சார்பாக, மண்மங்கலம் கிழக்கூரில் நடைபெற்றது. கரூர் மாவட்டச் செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ., தலைமைக் கழகப் பேச்சாளர் கரூர் முரளி, இளம் பேச்சாளர் கேத்ரின் மேல்ரினா சிறப்புரையாற்றினர்.

## சிங்காநல்லூரில் ரூ.40 லட்சம் மதிப்பில் திட்டப் பணி துவக்கம்!

கோவை, செப். 3 –

கோவை மாநகர் மாவட்டம், சிங்காநல்லூர் வார்டு எண் : 61, கள்ளிமடை ராஜவீதி பகுதியில் ரூபாய் 40 இலட்சம் மதிப்பீட்டில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணியினை மாநகர் மாவட்டச் செயலாளர், சிங்காநல்லூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நா.கார்த்திக் துவக்கி வைத்தார்.

இதில் சிங்காநல்லூர் பகுதி பொறுப்பாளர் சிங்கை மு.சிவா, மாநகராட்சி கிழக்கு மண்டலத் தலைவர் இலக்குமி இளஞ்செல்வி கார்த்திக், வட்டக் கழக செயலாளர் தென்னவர் செல்வராஜ், மாமன்ற உறுப்பினர் ஆதிமகேஸ்வரி திராவிடமணி, பகுதி அவைத் தலைவர் கே.பி.ராமகிருஷ்ணன், துணைச் செயலாளர்கள் திராவிட மணி, சம்பத்குமார், கௌரி, வட்டக் கழக துணைச் செயலாளர் பூங்கொடி மற்றும் கலைச்செல்வன், கருணாநிதி, முனுசாமி, மாணிக்கம் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



எழும்பூர் தொகுதி, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 6க்குட்பட்ட வார்டு எண்.77 மற்றும் 78இல் நடைபெற்று வரும் திட்டப் பணிகளின் முன்னேற்றம் குறித்த ஆய்வுக் கூட்டம், கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் தலைமையில் நடைபெற்றது. இவ்வாய்வுக் கூட்டத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி 6ஆவது மண்டல அலுவலர் மற்றும் 77, 78 வார்டுகளைச் சேர்ந்த மாநகராட்சி, சென்னைப் பெருநகரக் குடிநீர் வழங்கல் வாரியத்தின் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

## கழக இளைஞர் அணி சார்பில் நடத்தப்பட்ட முத்தமிழறிஞர் கலைஞரின் 102-வது பிறந்த நாள் விழா மற்றும் திராவிட மாடல் அரசின் 4 ஆண்டு

# சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!



வத்தலகுண்டு தெற்கு ஒன்றியம்,
திண்டுக்கல் கிழக்கு மாவட்டம்.



தாளவாடி கிழக்கு ஒன்றியம்,
ஈரோடு வடக்கு மாவட்டம்.



களக்காடு தெற்கு ஒன்றியம்,
திருநெல்வேலி கிழக்கு மாவட்டம்.



வெம்பாக்கம் மேற்கு ஒன்றியம்,
திருவண்ணாமலை வடக்கு மாவட்டம்.



துரிஞ்சாபுரம் கிழக்கு ஒன்றியம்,
திருவண்ணாமலை தெற்கு மாவட்டம்.



திமிரி கிழக்கு ஒன்றியம்,
இராணிப்பேட்டை மாவட்டம்.